## இளங்கலைஞர் விருதுக்கான கலைஞர்களை முன்மொழிதல் - 2023

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்ற இளங்கலைஞர்களின் அர்ப்பணிப்பான கலைச் சேவையினைப் பாராட்டும் நோக்குடன் யாழ்ப்பாண மாவட்டப் பண்பாட்டுப்பேரவை வருடா வருடம் இளங்கலைஞர் விருது வழங்கி கௌரவிப்பது வழமையாகும். மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற இளங்கலைஞர்களது விபரங்களை பின்வரும் விதிமுறைகளுக்கமைவாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**விதிமுறைகள்:**

1. 2022-12-31 அன்று நாற்பது வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. வயதினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் இணைக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு இங்கு வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. ஒருவர் பல கலைத்துறைகளில் ஈடுபட்டிருந்தாலும், பிரதானமாக எக்கலைச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றாரோ அத்துறைக்கே விண்ணப்பிக்க வேண்டும்.
5. கலைச்செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் பொருத்தமான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும். (புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகள், நிகழ்வுகளின் இறுவெட்டுக்கள் மற்றும் இதர ஆவணங்கள் போன்றன)
6. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆவணங்களைத் தவறவிட்ட கலைஞர்கள், கலைநிறுவனங்கள், கலாசாரப் பேரவை, மூத்த கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர் மூலம் தமது கலைப்பணி தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்த வேண்டும்.
7. தெரிவுசெய்யப்படும் கலைஞரது புகைப்படத்துடன் அவரது கலைச் செயற்பாடுகள் பற்றிய குறிப்பினையும் வரைந்து அனுப்புதல் வேண்டும்.
8. விருது தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பப்படிவம் என்பவற்றினை பிரதேச செயலக, மாவட்டச் செயலக கலாசார பிரிவில் அல்லது மாவட்ட செயலக http://jaffna.dist.gov.lk இணையத்தளம் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
9. விருது தொடர்பான விண்ணப்பப்படிவம் கிராம உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
10. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விருது வழங்கப்படவுள்ள கலைஞர்களது எண்ணிக்கை - 16

**தேர்வு முறை** : தெரிவானது துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்ட விருதுத் தெரிவுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும்.

**விருதுக்கான துறைகள் - 2023**

1. இலக்கியம் - சிறுகதை, நாவல், கவிதை இலக்கியம், நாடக எழுத்துரு, பதிப்புத்துறை, பத்தி எழுத்துக்கள், மொழிபெயர்ப்பு இலக்கியம்.
2. நாடகம் - கூத்து - வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து,
   - இசைநாடகம், நவீன, சமூக நாடகம்
3. இசைக்கலை - வாய்ப்பாட்டு (கர்நாடக இசை), வாத்திய இசை (வயலின், வீணை, மிருதங்கம், ஆர்மோனியம், நாதஸ்வரம், தவில், புல்லாங்குழல், வயலின், முகர்சிங், பறை, உடுக்கு உள்ளடங்கலான), பண்ணிசை, இசையமைப்பு, நாட்டார் இசை
4. சித்திரமும் வடிவமைப்பும் - மரச்சிற்பம், புடைப்பு சிற்பம், கற்சிற்பம், வார்ப்புச் சிற்பம், ஓவியம், பாரம்பரிய கட்டடக்கலை, வாத்திய உருவாக்கம்
5. ஒப்பனைக் கலை - பாரம்பரியக் கலைகளுக்கான ஒப்பனை
6. கிராமியக் கலை - பொம்மலாட்டம், காவடி, மகுடி, வசந்தனாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, பொம்மையாட்டம், கும்மி, கரகம்
7. பாரம்பரிய மருத்துவம்
8. அறிவிப்பாளர் மற்றும் வர்ணனையாளர்
9. கைவினைக் கலை- பன்னவேலை, கைப்பணிக்கலை, வனைதற்கலை
10. குறும்படம், திரைப்படம்

அ.சிவபாலசுந்தரன்

மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்,

மாவட்டச் செயலகம்,

யாழ்ப்பாணம்.

## இளம் கலைஞர் விருதுக்கான விண்ணப்பப்படிவம் - 2023.

01. கலைஞரின் முழுப்பெயர் :…………………………………………………………………….
02. முதலெழுத்துக்களுடன் பெயர் : …………………………………………………………..........
03. முகவரி :…………………………………………………………………….
…………………………………………………………………….
04. தொலைபேசி இல : …………………………………………………………........
05. தேசிய அடையாள அட்டை இல: ……………………………………………………………………
06. பிறந்த இடம் : …………………………………………………………........
07. பிறந்த திகதி : …………………………………………………………........
08. வயது (31.12.2022 அன்று) : …………………………………………………………........
09. பால். ஆண்/ பெண் : …………………………………………………………........
10. கிராம சேவையாளர் பிரிவு : …………………………………………………………........
11. பிரதேச செயலர் பிரிவு : …;……………………………………………………………
12. பிரதான கலைத்துறை : ……………………………………………………….................
13. கலைத்துறை சேவைக்காலம். :………………………………………………………….......
14. கௌரவங்களும் கிடைக்கப்பெற்ற பட்டங்களும் : ……………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………… ……………....
விண்ணப்பதாரியின் ஒப்பம் திகதி

மேற்படி விண்ணப்பதாரி எனது பிரிவில் நிரந்தரமாக வசிக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………... ……………….
கிராம அலுவலரின் ஒப்பம் திகதி

மேற்படி விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானது எனவும் விண்ணப்பதாரர் ………………….ஆம் ஆண்டு தொடக்கம் ……………………… பிரதேசத்தில் வசிக்கின்றார் என்பதையும் கலைஞரின் கலை வரலாற்று விபரம் உண்மை எனவும் பரிந்துரை செய்கின்றேன். (கலைஞரின் கலை வரலாற்று விபரம் கலாசார உத்தியோகத்தரால் இணைக்கப்படல் வேண்டும்.)

…………………………………. ……………….
பரிந்துரைப்பவர் ஒப்பம் திகதி
(கலாசார உத்தியோகத்தர்)

மேற்படி கலைஞரது விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி உரிய நடவடிக்கைக்காகச் சிபாரிசு செய்யப்பட்டு முன்னளிக்கப்படுகிறது .

. ………………………………. ………………..
பிரதேச செயலர் ஒப்பம். திகதி

மேற்படி கலைஞரின் விண்ணப்பம் விருதுத் தெரிவுக்கு அனுமதிக்கப்படுகிறது / அனுமதிக்கப்படவில்லை

………………………………
அரசாங்க அதிபரும் மாவட்டப் பண்பாட்டுப்பேரவைத் தலைவரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.